தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்




# சீனிவாசன் கலைக்கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம்



பெரம்பலூர் சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த பன்னாட்டு கருத்தரங்கில் கல்வி குழும இயக்குநர் ராஜபூபதி கருத்தரங்கு மலரினை வெளியிட்டார். அருகில் கல்லூரி முதல்வர் வெற்றிவேலன், டீன் சந்திரசவுத்ரி மற்றும் பலர்.

**பெரம்பலூர்,ஆக.26–**

பெரம்பலூர் சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், திண்டுக்கல், காந்தி கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போதி இன்டர்நேஷனல் ஜெர்னல் ரிசர்ச் ஹீமானிட்டீஸ் அண்ட் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் ஆகிய நிறுவனங்கள் சார்பில் ஒரு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கு நடந்தது. தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் சீனிவாசன் தலைமை வகித்து குத்து விளக்கேற்றி வைத்து கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். கல்விக் குழும இயக்குநர் ராஜ பூபதி முன்னிலை வகித்து கருத்தரங்கு மலரினை வெளியிட்டார். சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் காந்திகிராம் காந்திகிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் பேராசிரியர் முரளிதரன் கலந்துக் கொண்டு கலை மற்றும் சமூக அறிவியலில் புதுமையான சிக்கல்கள் மற்றும் அணுகுமுறைகள் என்னும் தலைப்பில் பேசினார். மற்றொரு சிறப்பு விருந்தினர் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி ஸ்டெல்லா மேரிகலந்துக் கொண்டு பேசினார். பன்னாட்டுக்கருத்தரங்கின் நிறைவு விழாவில் உயிர் தொழில் நுட்பவியல்; துறைத்தலைவர் ரம்யா கருத்தரங்கம் பற்றிய அறிக்கையை சமர்பித்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆங்கில ஆராய்ச்சித் துறை முன்னாள் இணைப் பேராசிரியர் ஜான் சேகர் சிறப்புரையாற்றினார்.

முதல்வர்கள்,டீன்கள், துறைத்தலைவர்கள், பேராசியர்கள், ஆராய்ச்சிப் படிப்பு பயில்வோர் என 40க்கும் மேற்பட்டோருக்கு வாழ்நாள் சாதனையாளர், சிறந்த கல்வியாளர்,சிறந்த ஆசிரியர், மூத்த ஆராய்ச்சியாளர், இளம் ஆராய்ச்சியாளர் விருதுகள் வழங்கப்பட்டன. சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் வெற்றிவேலன்,டீன் சந்திரசவுத்ரி,தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கூடுதல் பதிவாளர் இளங்கோவன், திண்டுக்கல் காந்தி கிராம் காந்திகிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் வெளிநாட்டு ஆங்கில மொழிகளின் பள்ளி முதன்மையர் இணைப்பேராசிரியர் பாலசுந்தரி, பதிப்பாசிரியர் நிர்வாக ஆசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். தடயவியல் துறைத்தலைவர் முனைவர்செந்தில்குமார் நன்றி கூறினார்.